நிலச்சீர்திருத்தத் துறை



கையேடு

2017

Scanned by CamScanner

கையேடு

நிலச்சீர்திருத்த துறை

நிலச்சீர்திருத்த ஆணையர் அலுவலகம்,
'எழிலகம்' இரண்டாம் தளம்,
சேப்பாக்கம், சென்னை–600 005
மின்னஞ்சல்: landref@tn.nic.in
இணையதளம் : www.landreforms.tn.gov.in

Scanned by CamScanner

பொருளடக்க அட்டவணை

வ. எண்.	பொருள்	பக்க எண்
1.	முன்னுரை	1–2
2.	நிர்வாகக் கட்டமைப்பு	3
3.	நிலஉச்சவரம்பு கொள்கை	3–4
4.	நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் நில உச்ச வரம்பு	5–7
5.	தொழில் வணிக நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தல் – பிரிவு 37–A	7 – 15
6.	பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி அளித்தல் – பிரிவு 37–B	16 – 18
7.	தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் 17/70	19
8.	15.2.70 அன்று உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை திருத்தச் சட்டம் 17/70ன்படி உபரியாக அறிவித்தல் தொடர்பான நடைமுறைகள்	19 – 25
9.	20.10.1970–க்குப் பின்னர் உச்சவரம்புக்கு மிகுதியாக வைத்திருக்கும் நிலங்களை திருத்தச் சட்டம் 17/70ன்படி உபரி நிலமாக அறிவிப்பதற்கான நடைமுறைகள்	25 – 27

Scanned by CamScanner

10.	1.3.1972–க்கு பின்னர் பொதுஅறக்கட்டளை வாங்கிய நிலங்களை திருத்தச் சட்டம் 37/72ன்படி உபரிநிலமாக அறிவிப்பது தொடர்பான	27 - 29
11.	புதிய இனங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்	29 – 30
12.	நிலஉடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை	30 – 34
13.	உபரி நில ஒப்படை மற்றும் பொதுநோக்கத்திற்காக உபரி நிலம் ஒதுக்கீடு செய்தல்	35 – 37
14.	ஒப்படை நிபந்தனைகள்	37 – 45
15.	நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக ஒப்படையை ரத்து செய்தல்	45
16.	மிகைநிலத்தை மறு ஒப்படை செய்தல்	45
17.	மிகைநிலத்தை பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்தல்	45 – 46
18.	மேல்முறையீடு	46
19.	குத்தகைச் சட்டங்கள்	50 – 55
20.	முதலமைச்சரின் உழவர்பாதுகாப்புத் திட்டம்–2011	55 – 64
21.	பூமிதான வாரியம்	64 – 69

நிலச்சீர்திருத்தத் துறை

முன்னுரை

தமிழ்நாடு வருவாய் வாரியம் ஒழிப்புச் சட்டம் 1980 (தமிழ்நாடு சட்டம் 36/1980)–ன்படி 1.12.1980ம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, வருவாய் வாரியம் 1.12.1980 முதல் கலைக்கப்பட்டு, நிலச்சீர்திருத்தம், நிலநிர்வாகம் மற்றும் வருவாய் நிர்வாகம் ஆகிய துறைகள் வருவாய்த் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. நிலச்சீர்திருத்தத் துறையால், ஊரகப்பகுதி விவசாய நிலங்களுக்கான சட்டம் மற்றும் விதிகள், அதாவது, நிலச்சீர்திருத்தம், குத்தகை சட்டங்கள், பூமிதானம், விவசாயிகள், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காக சமூகப் பாதுகாப்புத் திட்டமான முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துறையின் தலைவராக முதன்மைச் செயலர் / நிலச்சீர்திருத்த ஆணையரும், அவரின்கீழ் நிலச்சீர்திருத்த இயக்குநர், இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் ஆகியோர் தலைமையிடத்தில் உள்ளனர்.

Scanned by CamScanner

2014–15ஆம் ஆண்டில், பொதுமக்கள் தங்கள் குறைகளை தங்கள் மாவட்டங்களிலேயே தெரிவித்து தீர்வுகாணும் வகையிலும், பயன்களை விரைவாகவும் எளிதாகவும் பெற்றுக் கொள்ளும் வகையிலும், நிலச்சீர்திருத்தத் துறை மறுசீரமைப்பு செய்யப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி, மாநிலம் முழுவதற்குமாக இருந்த ஆறு நிலச்சீர்திருத்த உதவி ஆணையர் அலுவலகங்களுக்குப் பதிலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் (சென்னை நீங்கலாக) ஒரு நிலச்சீர்திருத்த பிரிவு உருவாக்கப்பட்டு, நிலச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் உள்ள அதிகாரங்கள் சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், பணி முன்னேற்றம் மாவட்ட ஆட்சியரால் மேற்பார்வையிடப்பட்டும் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

மேலும், பல்வேறு குத்தகைச் சட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, முதன்மை செயலர் / நிலச்சீர்திருத்த ஆணையர் அவர்களின் மேற்பார்வையில், மாநிலத்தில் பத்து வருவாய் நீதிமன்றங்கள் தனித்துணை ஆட்சியர்கள் (துணை ஆட்சியர்கள்) தலைமையில் இயங்கி வருகின்றன. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதான நிலங்கள் ஆகிய பணிகளும் மாவட்ட ஆட்சியரது தலைமையில் மாவட்ட நிர்வாகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிர்வாக கட்டமைப்பு

நிலச்சீர்திருத்தத்துறை நிருவாக கட்டமைப்பு பின்வருமாறு:–



Scanned by CamScanner

நில உச்சவரம்பு கொள்கை:

சமூதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நிலங்கள் முக்கிய ஆதாரமாக கருதப்படுகிறது. இது விவசாய நிலங்களுக்கான உரிமையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கும், விவசாய நிலங்களின் கைப்பற்றிற்கு உச்ச வரம்பினை நிர்ணயம் செய்யவும், இதனால், மிகை நிலங்களை கையகப்படுத்தி நிலமற்றவர்களுக்கும் மற்றும் ஊரகப் பகுதியில் உள்ளவர்களுக்கும் வழங்கவும் நிலஉச்ச வரம்பு கொள்கை அவசியமாகிறது.

எனவே, நில உடைமைகள் ஒருசிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்குவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 39–ன் உட்பிரிவு (b) மற்றும் (c)–ன்படி தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது.

நிலச்சீர்திருத்த சட்டத்தின்படி நில உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு, 15.2.1970 முதல் கீழ்கண்டவாறு நிலஉச்சவரம்பு நடைமுறையில் உள்ளது.

நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி நில உச்சவரம்பு

வ. எண்	விவரம்	அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு
1.	**குடும்பம்** i) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக் கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட)	**15 தர ஏக்கர்**
	ii) ஒவ்வொரு கூடுதல் குடும்ப உறுப்பினருக்கு	**5 தர ஏக்கர்**
	அதிகபட்ச உச்சவரம்பு	**30 தர ஏக்கர்**
	iii) இதனைத் தவிர, சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில், குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினரும் அவரது பெயரில் சீதன நிலமாக 10 தர ஏக்கர் நிலம் கூடுதலாக வைத்துக் கொள்ளலாம்.	
2.	**பொது அறக்கட்டளைகள் (Public Trusts)** (i) 1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ் தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) – 5 தர ஏக்கர்	

Scanned by CamScanner

	(ii) 1.3.1972 தேதிக்குப் பிறகு எந்த ஒரு பொது அறக் கட்டளையும் நிலங்களை வாங்க வழிவகை இல்லை. அதன் பிறகு, திருத்தச் சட்டம் 29/87ன்படி பொது அறக்கட்டளைகள் நிலங்களை வைத்துக்கொள்ள அரசின் அனுமதி பெற வேண்டும்.
	(iii) 1.3.1972 தேதிக்குமுன் இருந்த மத சார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious Nature) நில உச்ச வரம்பு சட்டத்திற்குள் வராது.

தரஏக்கர்

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 3 (40)–ன்படி, நிலத்தீர்வையின் அடிப்படையில் ஒருநிலத்தின் தர ஏக்கர் நிர்ணயம் செய்யப்படுகிறது.

தரஏக்கராக மாற்றுவதற்கான அட்டவணை

புஞ்சை நிலத்திற்கு

ஏக்கருக்கு தீர்வை	சாதாரண ஏக்கர்	தரஏக்கர்	தரஏக்கராக மாற்றும் பட்டியல்
ரூ.1.25–க்கு கீழ்	4	1	பரப்பு x 1/4
ரூ.1.25–2.00	3	1	பரப்பு x 1/3
ரூ.2.00 க்கு மேல்	2.5	1	பரப்பு x 2/5

நஞ்சை நிலத்திற்கு

ஏக்கருக்கு தீர்வை	சாதாரண ஏக்கர்	தரஏக்கர்	தரஏக்கராக மாற்றும் பட்டியல்
ரூ.4.00 க்கு கீழ்	2	1	பரப்பு x 1/2
ரூ.4.00 – 6.00	1.75	1	பரப்பு x 4/7
ரூ.6.00 – 8.00	1.60	1	பரப்பு x 5/8
ரூ.8.00 – 10.00	1.20	1	பரப்பு x 5/6
ரூ.10.00 – 15.00	1	1	சாதாரண ஏக்கருக்கு சமமான பரப்பு
ரூ.15.00–க்கு மேல்	0.80	1	பரப்பு x 5/4

குறிப்பு: தீர்வை ‘அ’ பதிவேட்டின்படி, பரப்பு என்பது – சாதாரண ஏக்கர்

தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தல்: சட்டப்பிரிவு 37–A

சட்டப்பிரிவு 3 (34)ன்படி, ‘நிறுவனம்’ என்பது ‘நபர்’ என்ற பொருளின் கீழ் வருகிறது. எனவே, ஒரு தொழில் அல்லது வணிக நிறுவனம் 15.000 தர ஏக்கர் நிலங்கள் மட்டும் வைத்துக் கொள்ளலாம் எனினும் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களின் தொழில் நோக்கத்திற்காக உச்ச வரம்புக்கு அதிகமாக வாங்கிய நிலங்களை உச்ச

Scanned by CamScanner

வரம்புக்கு மேல் வைத்துக் கொள்ள சட்டப்பிரிவு 37–A–ன் கீழ் அரசு அனுமதி அளிக்கிறது. அதற்காக நிறுவனங்கள் திருத்தச் சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்படி அந்த நிலத்தை உச்சவரம்புக்கு மேல் வாங்கிய தேதியிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்ய வேண்டும்.

CHECK SLIP

FOR

M/s ______________________________ LIMITED

1.	Name of the Company	:	M/s
	District	:	
	Taluk	:	
	Village	:	
2.	Date of application	:	
3.	Date on which application was forwarded by Government	:	

	a) Whether the application was filed in time	:	
	b) Reason for the delay in filing, if it was filed belatedly	:	
4.	Report received from District	:	
5.	**Details about the Company:-**		
	i) Certificate of incorporation and Date	:	
	ii) Line of Business	:	
6.	Profile of the Company:		

Scanned by CamScanner

7.	Request of the Company:-			
	a)	Total extent of land for which permission requested	:	
	b)	Out of (a) total area that is already purchased	:	
	(c)	Out of (a) total area that the company is going to purchase	:	
8.	a)	Nature of commercial or industrial operation	:	
	b)	i) Extent utilized so far	:	
		ii) Whether 25% of the lands put to industrial use	:	
	c)	Extent to be utilized in future with justification	:	
	d)	Combined sketch duly colour washed indicating the utilized and unutilized area	:	

9.	Year of purchase of lands		:	
10.	a)	Whether the lands have been purchased in the name of the Company or in the name of the individual	:	
	b)	From whom the lands are purchased (details of purchase from owners or relatives of owners to be furnished)	:	
11.	a)	Whether the sellers of the lands to the company are attracted under the Land Reforms Act	:	
	b)	Whether any conditionally assigned lands are involved in this case	:	Yes.

S.F. No.	Extent	Classification

Scanned by CamScanner

	c)	Whether any poramboke lands are encroached	:		
	d)	Whether any poramboke lands lie in the midst of the lands purchased by the company			
	e)	Whether access to the nearby poramboke lands which is being used by the public are disturbed by the Company	:		
	f)	If disturbed, details of alternate arrangements made.	:		
12.	**Determination of holdings after reconciliation of sale deed, application and revenue records.**				
	a)	Extent applied by the company (as per working sheet)	:	Ordinary acres	Standard acres

	b)	**Less:** i. Land assignment S.F. no.	:		
		Balance			
	c)	**Add:** i. Additional purchase	:		
		Balance			
	c)	Less: Ceiling Area (15.000 Standard Acres)	:		
	e)	Extent to be considered for grant of permission under section 37 – A of the Act	:		
13.	Details of lands if any sold by the company after 1.3.72		:		
14.	Wet land involved		:		

Scanned by CamScanner

15.	Whether the lands applied are mortgaged	:	
16.	a) Details of previous permission granted indicating the utilized area and unutilized area and if not 1st time	:	
	b) Time limit granted	:	
17.	Date of commencement of production	:	
18.	Details of necessary permission / License / Clearance obtained from the concerned department: i. .		

19.	Whether Project Report submitted by the company		
20.	Tentative plan of action for the lands earmarked for future utilization / expansion	:	
21.	Recommendation of the District Revenue Officer with specific points.		Yes/No Recommended . 1. 2.

District Revenue Officer,

....

Scanned by CamScanner

பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி : சட்டப்பிரிவு 37–B

பொது அறக்கட்டளைகள், கல்வி மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக வாங்கிய நிலங்களுக்கு சட்டப்பிரிவு 37–B–ன் கீழ் அரசு அனுமதி அளிக்கிறது. அதற்காக பொது அறக்கட்டளைகள், திருத்தச் சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்படி அந்த நிலத்தை வாங்கிய தேதியிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்ய வேண்டும்.

CHECK SLIP for 37-B cases

1. Name of the Trust :
   (i) Lands held at :
   District :
   Taluk :
   Village :
2. Date of receipt of application in Government :
3. Date on which application was forwarded by Government :
   c) Whether the application was filed in time :
   d) Reason for the delay in filing, if it was filed belatedly :

4. Details about the Trust :
   i) Certificate of Registration and Date :
   ii) Line of Activities :
5. Profile of the Trust :
6. Request of the Trust :
   a) Total extent of land held by the Trust after reconciliation :
      (i) Out of (a) total area already purchased :
      (ii) Out of (a) total area to be purchased :
7. Institution run by the Trust :

Sl. No.	Institution Name	No. of Students studying	No. of Teaching Studying	No. of Non Teaching Studying

8. a) Whether the sellers of the lands to the Trust are attracted under the Land Reforms Act :
   b) Whether any conditionally assigned lands are involved in this case :
   c) Whether any poromboke lands are encroached

Scanned by CamScanner

	d) Whether access to the nearby poramboke lands which is being used by the Public are not disturbed by the Trust	:
	e) If disturbed, details of alternate arrangements made	:
9.	Details of lands sold by the Trust after 1.3.72	:
10.	a) Details of previous permissions granted by the Government with extent	:
	b) Time Limit granted	:
	e) Extent utilized with time limit	:
11.	Utilisation details for current application	:
	a) Total extent held by the Trust [As per 6 (a)]	:
	b) Extent utilized so far	:
	c) Balance extent to be utilized in future	:
	d) Combined sketch duly colour washed indicating the utilized and unutilized area	:
12.	Plan of action to utilize the unutilized area	:
13.	Recommendation with specific points of the District Revenue Officer	:
14.	Recommendation of the Principal Secretary / Commissioner of Land Reforms	:

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 பின்னர் திருத்தப்பட்ட சட்டம் 17/70

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம் மற்றும் விதிகளின் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் விதிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டம் 17/70 அமுலுக்கு வந்த தேதியான 15.2.1970 அல்லது அதற்குமுன் வைத்துள்ள நிலங்கள் மீது நடவடிக்கை எடுப்பது, மற்றும் திருத்தச் சட்டம் 17/70 அறிவிக்கை வெளியான 2.10.1970 தேதிக்குப் பின்னர் கிரையம் செய்யப்பட்ட நிலங்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பான நடைமுறைகள் பின்வருமாறு:–

I. 15.2.70 அன்று உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்துள்ள நிலஉடமையாளரிடமிருந்து மிகை நிலங்களை உபரியாக அறிவித்தல் தொடர்பான நடைமுறைகள்:

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 திருத்திய சட்டம் 17/70, 15.2.70 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அறிவிக்கை 2.10.1970 அன்று வெளியிடப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் 17/70 இன்றும் அமலில் உள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 7ன்படி, 15.2.70 தேதியில் ஒரு குடும்பம் (5 உறுப்பினர் கொண்டது),

Scanned by CamScanner

ஒரு நபர், நிறுவனம், தனியார் அறக்கட்டளை, கூட்டுறவு சங்கம் ஆகியவை 15.000 தரஏக்கர் நிலங்கள் மட்டுமே தங்கள் கையிருப்பில் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் வைத்துள்ள நிலங்களை மேற்படி சட்டம் மற்றும் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) விதிகள் 1962 ஆகியவற்றில் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி அதிகாரம் பெற்ற அலுவலரால் நடவடிக்கை எடுத்து, உபரி நிலங்கள் அரசால் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுகிறது. எனவே, 15.2.1970 தேதியின்படி நில உடைமையாளர்கள் வைத்துள்ள மிகை நிலங்களின் பேரில் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பின்வருமாறு:–

a) பிரிவு 9(2) (b)–ன் கீழான உத்தரவு:

i) விவசாய நில உடைமைகள் தொடர்பான நில விவரங்களை சேகரித்து, அவற்றில் விவசாயத்திற்கு தகுதியான (அதாவது பயிரிட தகுதியான) நிலங்களை கணக்கிட்டு, அதிகாரம் பெற்ற அலுவலர், நில உடைமையாளர்கள் தங்கள் விளக்கங்களை உரிய ஆதாரங்களோடு அளிக்க தக்க வாய்ப்புகள் அளித்து, நில உடைமையாளரின் மொத்த நிலங்கள், அவர் நில உச்சவரம்புக்குள் வைத்துக் கொள்ள வேண்டிய நிலங்கள், மிகை நிலமாக அறிவிக்கப்பட உள்ள நிலங்கள் தொடர்பான விவரங்கள் ஆகியவை அடங்கிய உத்தரவை சட்டப்பிரிவு 9(2)(b) இன் கீழ் பிறப்பிக்க வேண்டும். இந்த உத்தரவினை நில உடைமையாளருக்கு சார்வு செய்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதில், அறிவிப்பு (Notice), நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) விதிகள் 1962–ன் படிவம் 4ல் உள்ளபடி இருக்க வேண்டும்.

ii) இந்த உத்தரவினை எதிர்த்து நிலத்தீர்ப்பாயத்தில் (மாவட்ட வருவாய் அலுவலர்) மேல்முறையீடு செய்ய வழிவகை உள்ளது.

b) பிரிவு 10(1)ன் கீழான வரைவு பட்டியல் (Draft Statement):

சட்டப்பிரிவு 9(2)(b)ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், உரிய விசாரணைக்குப் பின்னர் தகுதியிருப்பின் அதிகாரம் பெற்ற அலுவலர் கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட வரைவு பட்டியலினை தயார் செய்ய வேண்டும்.

i. ஒவ்வொரு நபரும் வைத்திருக்கும் அல்லது வைத்திருக்கக் கூடிய உச்சவரம்பிற்கு மிகையான நிலங்களை கிராம வாரியாகவும், புலஎண் வாரியாகவும், மொத்த பரப்பு, உச்சவரம்பிற்குள் வைத்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள பரப்பு

ii. மிகைநிலமாக அறிவிக்கப்பட வேண்டிய பரப்பு

iii. சட்டப்பிரிவு 73(vi), 73(vii), 73(viii)–இன் கீழ் விலக்களிக்கப்பட்ட நிலங்கள்,

iv. விலக்களிக்கப்பட்ட சீதன நிலங்கள்

v. குத்தகைதாரர்கள் விபரங்கள்

Scanned by CamScanner

vi. உபரிநிலமாக அறிவிக்க உத்தேசிக்கப்பட்ட நிலங்களின் விவரம் முதலியவை,

சட்டபிரிவு 10(1)ன் கீழான வரைவு பட்டியல் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) விதிகள் 1962ல் வரையறுக்கப்பட்ட படிவத்தில் அதிகாரம் பெற்ற அலுவலர் தயாரித்து தமிழ்நாடு அரசிதழில் வெளியிட வேண்டும். அந்த வரைவு பட்டியலின் நகலை நிலஉடைமையாளருக்கும், நிலங்களின் மீது உரிமையுள்ள மற்ற நபர்களுக்கும் அறிவிப்பு (Notice) ஒன்றில் இந்த வரைவு பட்டியல் மீது ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை இந்த நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு குறிப்பிட்டு, சார்வு செய்ய வேண்டும்.

c) சட்டப்பிரிவு 10(5)கீழான ஆணை:

i) நில உடைமையாளர் மற்றும் அந்நிலங்களின் மீது உரிமையுள்ள நபர்கள் பிரிவு 10(1) இன் கீழான வரைவு பட்டியல் மீதான ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு உரிய காலத்திற்குள் பெறப்பட்ட ஆட்சேபனையை கருத்தில் கொண்டு, ஆட்சேபனையாளருக்கு தகுந்த வாய்ப்பளித்து அவர்கள் அளிக்கும் ஆதாரங்களை பெற்று, அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப்பிரிவு 10(5)ன் கீழான உத்தரவை பிறப்பிக்க வேண்டும். தேவைப்பட்டால், இது தொடர்பாக புலத்தணிக்கை மேற்கொள்ளலாம். இந்த

உத்தரவினை நிலஉடைமையாளருக்கு சார்வு செய்து சான்று பெற வேண்டும்.

ii) இந்த உத்தரவை எதிர்த்து நிலத்தீர்ப்பாயத்தில் (மாவட்ட வருவாய் அலுவலர்) மேல்முறையீடு செய்யலாம்.

d) சட்டப்பிரிவு 12ன்கீழான இறுதி பட்டியல்: (Final Statement)

i) பிரிவு 10(1)ன் கீழான வரைவு பட்டியல் அல்லது பிரிவு 10(5)ன் கீழான ஆணை ஆகியவற்றின் மீது ஆட்சேபனை எதுவும் பெறப்படவில்லை எனில், அதிகாரம் பெற்ற அலுவலர், நேரடியாக சட்டப்பிரிவு 12ன் கீழ் இறுதி பட்டியலினை தயாரிக்கலாம். இச்சட்டப் பிரிவின் கீழ், இறுதியாக நில உடைமையாளர் வைத்துள்ள நிலங்கள் பற்றிய விவரங்களை (புல எண் மற்றும் கிராமம் வாரியாக), நில உடைமையாளர் உச்சவரம்புக்கு வைத்துக் கொள்ள வேண்டிய நிலங்கள் மற்றும் உபரிநிலமாக அறிவிக்க வேண்டிய நிலம் (புலஎண் மற்றும் கிராமம் வாரியாக) ஆகிய விவரங்களை உரிய படிவத்தில் அதிகாரம் பெற்ற அலுவலரால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட இறுதி பட்டியலின் நகலை நில உடைமையாளருக்கு சார்வு செய்து சான்று பெற வேண்டும்.

ii) இந்த உத்தரவை எதிர்த்து நில ஆணையரிடம் (முதன்மை செயலர் / நிலச்சீர்திருத்த ஆணையர்) சீராய்வு மனு செய்து கொள்ளலாம்

Scanned by CamScanner

e) சட்டப்பிரிவு 18(1)ன் கீழான அறிவிக்கை:

i. சட்டப்பிரிவு 12ன் கீழான இறுதி பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட பின்னர், உபரியாக அறிவிக்கப்படும் நிலங்கள் குறித்த விவரங்களையும், அவை பொது நோக்கத்திற்கு தேவைப்படுகின்றன என்ற விவரங்களையும் தெரிவித்து சட்டப்பிரிவு 18(1)ன் கீழான அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் அரசு வருவாய்த் துறை மூலம் பிரசுரம் செய்யப்படும்.

ii. இந்த அறிவிக்கை மாவட்டத்திலிருந்து பெறப்பட்டு நிலச்சீர்திருத்த இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பப்படும்.

iii. இந்த அறிவிக்கை பிரசுரம் செய்யப்பட்ட பின்னர், அதனை அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப்பிரிவு 18(2)ல் குறிப்பிட்டவாறு பிரசுரம் / சார்வு செய்வார்.

iv. இந்த அறிவிக்கைக்கு எதிராக நில ஆணையர் (முதன்மை செயலர் / நிலச்சீர்திருத்த ஆணையர்) முன்பு சீராய்வு மனு செய்யலாம்.

f) 15.2.70–க்கும் 2.10.70–க்கும் இடையிலான நில உரிமை மாற்றம்

i. வயது முதிரா மகன், (minor son) திருமணமாகாத மகள், (unmarried daughter), ஆண் வாரிசு வழியில், வயதுக்கு முதிரா பேரன் மற்றும் திருமணமாகாத பேத்தி ஆகியவர்களின் பெயரில் அன்பு மற்றும் பற்றுதல் (love and affection) காரணமாக தாமாக முன்வந்து

செய்யப்பட்ட, நில உரிமை மாற்றம் (partition) கல்வி நிறுவனங்கள், மருத்துவமனை ஆகியவற்றிக்கு அளிக்கப்பட்ட நில உரிமை மாற்றம் ஆகியவை செல்லதக்கது ஆகும். பின்னர், திருத்தச் சட்டம் 11/96ன்படி இவ்வாறான நிலமாற்றங்கள் செல்லதக்கதல்ல. எனவே, இவ்வாறான நிலங்களை நில உடமையாளர் கைப்பற்றில் வைத்து நடவடிக்கைஎடுக்க இத்திருத்தச் சட்டத்தில் வழிவகை உள்ளது.

ii. 2.10.1970–க்கு பின்னர், உச்சவரம்பிற்கு மிகுதியாக கிரையம் பெற்ற நிலங்கள், சட்டப் பிரிவு 20ன் கீழ் கவரப்படுகிறது. எனவே, இதில், நில உடைமையாளர் மற்றும் விற்பனையாளர்கள் விளக்கத்துடன் தக்க ஆவணங்களை சமர்ப்பிக்க தகுந்த வாய்ப்பளிக்கப்பட்ட பின்னர் அதிகாரம் பெற்ற அலுவலரால் அந்த மிகை நிலங்கள் உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

திருத்தச்சட்டம் 17/70 அமலுக்கு வந்த 15.2.1970 தேதியில், நில உடைமையாளர் உச்ச வரம்புக்கு அதிகமாக வைத்துள்ள நிலங்கள் குறித்து முடிவு செய்ய மேற்கண்ட நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

II. தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 பின்னர் திருத்தப்பட்ட சட்ட பிரிவு விதி 20இன் கீழ்,

Scanned by CamScanner

2.10.1970–க்குப் பின்னர் உச்சவரம்புக்கு மிகுதியாக வைத்திருக்கும் நிலங்களை உபரிநிலமாக அறிவிப்பதற்கான நடைமுறைகள்

விற்பனை மற்றும் அன்பளிப்பு (இறப்பு காரணமாக ஏற்படும் அன்பளிப்பு தவிர) பரிவர்த்தனை, ஒப்புவிப்பு, ஒப்பந்தம் மற்றும் பாக உடன்படிக்கை ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தப்படும் நிலமாற்றங்கள், திருத்தச்சட்டம் அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியான 2.10.1970–க்கு பின்னர் பெற்றவருக்கு உச்சவரம்புக்கு அதிகமாக இருப்பின், அந்நிலங்களை பிரிவு 7ல் குறிப்பிட்ட வரையறைகளுக்கு எதிரானதாகவும் தண்டனையாகவும் கருதி அவ்வாறாக நிலங்களை பெற்ற தேதியில் இருந்து அரசு மாற்றம் செய்ய, எந்த அதிகாரம் பெற்ற அலுவலரின் அதிகார எல்லைக்குள் அதிக அளவிலான நிலங்கள் உள்ளனவோ அந்த அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சட்டப்பிரிவு 20ல் அதிகாரம் உள்ளது. அதிகாரம் பெற்ற அலுவலர் அவ்வாறு மாற்றம் செய்ததற்கான காரணங்களை அதில் பதிவு செய்வார். இருப்பினும், நிலஉரிமை மாற்றம் செய்தவருக்கும் நில உரிமை மாற்றம் பெற்றவருக்கும் விளக்கம் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க போதுமான வாய்ப்பு அளித்து விசாரணை மேற்கொள்ளாமல் ஆணை ஏதும் பிறப்பிக்கக் கூடாது.

இவ்வாறு, 15.000 தர ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் நிலஉடைமையாளர், (தனிநபர், குடும்பம், தனியார் அறக்கட்டளை, தொழிற்சாலை, கூட்டுறவு சங்கம், நிறுவனம் முதலியன) அறிவிக்கை

வெளியிடப்பட்ட தேதியான 2.10.1970–க்கு பின்னர், அதிகாரம் பெற்ற அலுவலர், விற்பனை செய்தவர் மற்றும் வாங்கியவருக்கு போதுமான வாய்ப்பு அளித்து மிகை நிலங்களை உபரியாக அறிவித்து சட்டப்பிரிவு 20இன் கீழ் உத்தரவினை பிறப்பிக்க வேண்டும்.

ஒரு தொழில் நிறுவனம் உச்சவரம்பிற்கு மேல் வைத்துள்ள நிலங்களை தொழில் மற்றும் வணிக நோக்கத்திற்காக வைத்துக் கொள்ள அனுமதிகோரி சட்ட பிரிவு 37–A–ன் கீழ் அரசுக்கு விண்ணப்பம் அளித்திருந்தால், அந்த தொழில் நிறுவனம் வைத்துள்ள நிலங்களை சட்டப்பிரிவு 37–A இன் கீழ் பரிசீலிக்க வேண்டும். ஆனால் அந்த தொழில் நிறுவனம் அவ்வாறு சட்டப்பிரிவு 37–A இன்கீழ் அரசுக்கு விண்ணப்பம் அளிக்காத பட்சத்தில் சட்டப்பிரிவு 20–ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

III. **தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டம் 37/72 பிரிவு 20A இன் கீழ், 1.3.1972–க்குப் பின்னர் பொது அறக்கட்டளை வாங்கிய நிலங்களை உபரிநிலமாக அறிவிப்பது தொடர்பான வழிமுறைகள்:**

பிரிவு 20A இன்படி, பிரிவு 2 உட்பிரிவு (2), உட்பிரிவு (1)ல் கூறு (c) உட்கூறு (ii), உட்பிரிவு (1)ல் கூறு (d) உட்கூறு (ii), உட்பிரிவு (3–B)ல் கூறு (b) மற்றும் பிரிவு 5ல் உட்பிரிவு (3–C) ஆகியவற்றில் உள்ள வழிமுறைகளுக்கு மாறாக எந்த ஒரு நிலத்தையும் எந்தவிதமாக

Scanned by CamScanner

பெற்றாலும் அது மேற்படி பிரிவுகளின்படி செல்லதக்கதல்ல, எனவே, அதனை தண்டணையாகவும் கருதி அங்ஙனம் பெறப்பட்ட நிலத்தின் பெரும்பகுதி எந்த அதிகாரம் பெற்ற அலுவலரது எல்லைக்குள் வருகிறதோ, அவரால் நிலம் மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அரசுக்கு மாற்றம் செய்யப்படும். அதிகாரம் பெற்ற அலுவலர், அவ்வாறு மாற்றம் செய்ததற்கான காரணத்தை எழுத்துமூலம் அதில் பதிவுசெய்ய வேண்டும். பொது அறக்கட்டளைகளை பொறுத்தவரை, உச்ச வரம்பிற்குள் வைத்துக்கொள்ள வழிவகை ஏதும் இல்லை. எனவே, சிறிதளவு நிலம் ஏதும் பொது அறக்கட்டளை வாங்கினாலும் அந்நிலம் சட்டப்பிரிவு 20Aன் கீழ் கவரப்படும். மேலும், பொது அறக்கட்டளை கல்வி / மருத்துவ நோக்கத்திற்காக நிலங்களை வைத்துக் கொள்ள சட்டப்பிரிவு 37–Bன் கீழ் அரசுக்கு விண்ணப்பித்திருந்தால், அந்த அறக்கட்டளை சட்டப்பிரிவு 37–Bஇன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். விண்ணப்பிக்காவிட்டால், பிரிவு 20Aன் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

எனவே, பொது அறக்கட்டளையினை பொறுத்தவரை, 1.3.1972–க்கு பின்னர் வாங்கிய நிலங்களுக்கு அந்த அறக்கட்டளை சட்டப்பிரிவு 37–Bன் கீழ் அரசுக்கு விண்ணப்பிக்கா விட்டால், அதிகாரம் பெற்ற அலுவலர், மேற்படி நிலங்களை விற்றவர் மற்றும் வாங்கிய அறக்கட்டளைக்கு உரிய வாய்ப்பு கொடுத்த பின்னர், அவ்வாறு வாங்கிய

நிலங்களை உபரியாக அறிவித்து சட்டப்பிரிவு 20Aன் கீழ் விரிவான ஆணை பிறப்பிக்க வேண்டும்.

v. புதிய இனங்களின் மீது நடவடிக்கை எடுத்தல்

(i) ஒரு நில உடைமையாளர் ஒரு மாவட்டத்திலுள்ள பிறகோட்டத்தில் (other Division) அல்லது பிற மாவட்டங்களில் (other District) நிலம் வைத்திருந்தால், எந்த கோட்டத்தில் நில உடைமையாளர் அதிக நிலம் வைத்துள்ளாரோ அந்த கோட்டத்தின் அதிகாரம் பெற்ற அலுவலர், நிலங்களின் விவரத்தை சேகரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பிறமாவட்டங்களில் உள்ள நில விவரங்களை மாவட்ட ஆட்சியர் மூலமாக சேகரிக்க வேண்டும்.

அனைத்து ஆவணங்களையும் பெற்றபின்னர், நில உடைமையாளர்கள் வைத்துள்ள மொத்த நிலங்களையும் புலஎண் வாரியாக தர ஏக்கராக மாற்றி, உச்சவரம்பான 15.00 தரஏக்கருக்கு அதிகமாக உள்ள நிலத்தை, மேலே II–ல் குறிப்பிட்டவாறு சட்டப்பிரிவு 20ன் கீழ் நில உடைமையாளர்களுக்கு உரியவாய்ப்பு அளித்த பின்னர், உச்சவரம்பிற்கு அதிகமாகவுள்ள வரை உபரியாக அறிவிக்க வேண்டும். மேலும், பொது அறக்கட்டளை வைத்துள்ள நிலங்களைப் பொறுத்தவரை, மேலே III–இல் குறிப்பிட்டவாறு சட்டப்பிரிவு 20Aன் கீழ் உரிய வாய்ப்பு அளித்த பின்னர் நிலங்களை உபரியாக அறிவிக்க வேண்டும். அந்த ஆணையினை நில உடைமையாளருக்கு சார்வு செய்து ஒப்புதல் பெற வேண்டும். இந்த

Scanned by CamScanner

கோப்புகள் மேல்முறையீடு (appellate forum) அல்லது நீதிமன்றத்திற்கு பிற்காலத்தில் தேவைப்படும் என்பதால் அவற்றை முறையாக பராமரிக்க வேண்டும். மேலும், நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டது தொடர்பான விவரங்களை எம் ஆர் 1 பதிவேட்டிலும் பதிவு செய்ய வேண்டும். தொழில் நிறுவனம் மற்றும் பொது அறக்கட்டளை ஆகியவை முறையே சட்டப்பிரிவு 37–A மற்றும் 37–B ன் கீழ் ஏற்கனவே அரசுக்கு விண்ணப்பித்திருந்தால், அவற்றை அந்தந்த பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இனங்களில் சட்டப்பிரிவு 20 மற்றும் 20A இன் கீழ் அறிவிப்பு (notice) அனுப்பக் கூடாது.

மேற்கண்டவாறு, ஆணை / அறிவிக்கையின் அடிப்படையில் நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டு, அவ்வாறு உபரியாக அறிவிக்கப்பட்ட நிலங்கள், தமிழ்நாடு நிலச்சீர்திதித்த (உபரி நில விநியோகம்) விதிகள் 1965 இன்படி ஒப்படை நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்படை செய்யப்படுகின்றன.

நில உரிமையாளருக்கு தொகை வழங்குதல்

பிரிவு 50(1)

i) கண்டறியப்பட்ட உபரி நிலங்களக்க அரசால் தொகை நிர்ணயம் செய்யப்படுதல்.

ii) அட்டவணை III–ல் குறிப்பிடப்பட்டுள்ள படி கணக்கீடு செய்து தொகை வழங்குதல்.

பிரிவு 50(2)

பிரிவு 18(1)ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் நில உரிமையாளர் இழப்பீட்டு தொகை கோரி மனு கொடுத்துக் கொள்ளலாம்.

பிரிவு 50(3)

அதிகாரம் பெற்ற அலுவலர் அட்டவணை III–ல் குறிப்பிடப்பட்டுள்ள படி மதிப்பு நிர்ணயம் செய்து வரைவு மசோதா பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

பிரிவு 50(3)(a) (ii)

நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் ஆட்சேபனை ஏதுமிருந்தால் நில உரிமையாளர் தெரிவிக்கலாம்.

பிரிவு 50(4)

அதிகாரம் பெற்ற அலுவலர் ஆட்சேபனை மனு மீது பரிசீலித்து ஆவணங்களை பார்வையிட்டு மனுதாரரை (நில உரிமையாளரை) விசாரணை செய்து அதன் அடிப்படையில் ஆணை பிறப்பிக்கவேண்டும்.

பிரிவு 50(5)

பிரிவு 50(4)–ன் கீழ் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் தொகைக்கு ஏதும் மாற்றமிருந்தால் திருத்திய வரைவு மசோதா பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

Scanned by CamScanner

பிரிவு 50(6)

அவ்வாறு மாறுதல் செய்யப்பட்டதற்கு நில உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை குறித்து இறுதி மசோதா பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

நில உரிமையாளருக்கு தொகை வழங்குதல் 27.10.1978–ற்கு முன் நடைமுறையில் இல்லை.

27.10.1978க்கு பின் கீழ்காணும் அட்டவணை III–யில் உள்ளபடி கணக்கீடுசெய்து நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு 18(1) விதி வெளியிடப்பட்ட அறிவிக்கை தேதியிலிருந்து 4% வட்டி கணக்கீடு செய்து வழங்கப்பட வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டு தொகைக்கு

அட்டவணை III

நிலத்தின் தன்மை	வழங்கப்படும் தொகை
நஞ்சை,மானாவாரி நிலம், அரசு நீர் ஆதாரங்கள் நிலம் இரண்டு மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட போகங்கள்	நிலவரி (தீர்வை) x 20 மடங்கு + ஒரு ஏக்கர். ரூ.9/–
ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட போகங்களில் ஒரு போகத்திற்கான தண்ணீர் பெறப்படும் நிலங்களுக்கு	நிலவரி (தீர்வை) x 20 மடங்கு + ஒரு ஏக்கர். ரூ. 5/-
புஞ்சை, மானாவாரி நிலங்களுக்கு தனியார் நீர் ஆதாரங்களிலிருந்து நீர்பாய்ச்சப்பட்டு	நிலவரி (தீர்வை) x 20 மடங்கு + ஒரு ஏக்கர். ரூ. 5/–

நஞ்சை, மானாவாரி நிலம், அரசு நீர் ஆதாரங்கள் நிலம் இரண்டு மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட போகங்கள் நிலவரிதீர்வை x 20 மடங்கு ரூ. 9/– ஒரு ஏக்கர்.

நிலவரிதீர்வை x 20மடங்கு ரூ.5/– ஒரு ஏக்கர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட போகங்களில் ஒரு போகத்திற்கான தண்ணீர் பெறப்படும் நிலங்களுக்கு நிலவரிதீர்வை x 20 மடங்கு ரூ.5/– ஒரு ஏக்கர்.

புஞ்சை, மானாவாரி நிலங்களுக்கு தனியார் நீர் ஆதாரங்களில் இருந்து நீர் பாச்சப்பட்டு நிலவரிதீர்வை x 20மடங்கு ரூ.5% ஒரு ஏக்கர்.

18(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு உள்ள 5 பசலிக்கு (ஆண்டு)களில் பயிரிடரப்படாத நிலங்களுக்கு தொகை வழங்குதல் வேண்டும்.

உதாரணமாக – நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை ரூ.28,544/– என கணக்கீடு செய்யப்பட்டு வரப்பட்டால் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பிரித்து அதன் மடிங்காக வழங்கப்பட வேண்டும்.

Scanned by CamScanner

1st 3000 x 10 மடங்கு

2nd 3000 x 9 மடங்கு

3rd 3000 x மடங்கு

4th 3000 x மடங்கு

5th 3000 x மடங்கு

பாக்கி 13544 x 5 = வழங்கப்படும் தொகை

28544

மரங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு வழங்கப்படும் தொகை விபரம்

1. நில உரிமையாளரால் உருவாக்கப்பட்ட பலன்தரும் மரங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1000/–.

2. பழத்தோட்டம், பூந்தோட்டம், பழம் தரம் மரங்கள் மற்றும் தோப்புகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.3500/– ஒரு ஏக்கர்.

3. தன்னிச்சையாக வளர்ந்த பலன்தராத மரங்கள் ஒரு ஏக்கருக்கு ரூ.250/–

4. கட்டிடங்கள், கிணறு முதலியவற்றிக்கு பொதுப்பணித் துறையினரால் இந்திய வருமானவரிச் சட்டம் 1961ன்படி நிர்ணயிக்கப்படும் மதிப்பு (Written down value)

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகைநில விநியோகம்) விதிகள், 1965–ன் கீழ் மிகை நில ஒப்படை மற்றும் பொது நோக்கத்திற்காக மிகைநிலம் ஒதுக்கீடு

1) எம்.ஆர் IV பதிவேடு

விதி 3ன்படி, ஒப்படை வழங்கும் அதிகாரி, (Assigning Authority) படிவம் – A–ல் உபரி நிலங்களுக்கான பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். இப்பதிவேடு “எம் ஆர் 4 பதிவேடு” என அழைக்கப்படும். (Master Register IV) சட்டபிரிவு 18 (1) அல்லது சட்டப்பிரிவு 20 அல்லது சட்டப்பிரிவு 20–A இன்கீழ் உபரி நிலங்கள் என அறிவித்த பின், ஒப்படை வழங்கும் அதிகாரி அப்பதிவேட்டில் உபரிநிலம் தொடர்பான கீழ்க்கண்ட அனைத்து விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும்:–

i. எம்.ஆர் 4 எண்

ii. நில உடைமையாளரின் பெயர்

iii. பிரிவு 18(1)இன் கீழான அறிவிக்கை அல்லது பிரிவு 20–ன் கீழான ஆணை அல்லது பிரிவு 20–A–இன் கீழான ஆணை தேதி

iv. கிராமத்தின் பெயர்

v. புல எண்

Scanned by CamScanner

vi. வகைபாடு

vii. பரப்பு (ஏக்கரில்)

viii. படிவம் –B–யில் அறிவிப்பு வெளியிட்ட தேதி

ix. படிவம் – D–யில் அறிவிப்பு வெளியிட்ட தேதி

x. விதி 8 (3)ன் கீழான விசாரணை தேதி

xi. விதி 8 (4)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒப்படை ஆணை தேதி மற்றும் ஒப்படை வழங்கப்பட்ட பரப்பு

xii. படிவம் E–யில் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி

xiii. படிவம் F–ல் படிவம் நிறைவேற்றிய தேதி

xiv. ஒப்படைதாரர்களுக்கு நிலத்தை ஒப்புவிப்பு செய்த தேதி

(தகவலுக்காக: மாஸ்டர் ரிஜிஸ்டர் –I (MR I) பதிவேட்டில் மிகை நிலங்களை உபரிநிலமாக அறிவிக்கப்பட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழான அறிவிக்கை வெளியிடுதல் மற்றும் சட்டப்பிரிவு 20 மற்றும் 20–A–ன் கீழான உபரிநிலமாக அறிவித்தல் வரையிலான விவரங்கள் பதிவு செய்யயப்படுகின்றன.

மாஸ்டர் ரிஜிஸ்டர் – II (MR II) பதிவேட்டில், பயிரிடும் குத்தகைதாரர்கள் வைத்துள்ள குத்தகை நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிப்பது தொடர்பான விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

மாஸ்டர் ரிஜிஸ்டர் – III (MRIII) பதிவேட்டில், நில உடைமையாளரிடமிருந்து உபரியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்படுகின்றன).

2) உபரி நில ஒப்படை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோருதல்:

அ) ஒப்படை வழங்கும் அதிகாரி, (Assigning Authority) உபரி நிலங்களை ஒப்படை வழங்குவதற்கு விதி 4–ன்படி விண்ணப்பங்கள் அளிக்கக் கோரி, படிவம் –B– யில் வரையறுக்கப்பட்டவாறு கீழ்க்கண்ட வழிகளில் விளம்பரம் செய்ய வேண்டும்.

i. கிராமசாவடியில் (கிராமநிர்வாக அலுவலர் அலுவலகம்) ஒட்டி விளம்பரம் செய்தல்

ii. டாம், டாம் அடித்தல்

iii. மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், ஒப்படை வழங்கும் அதிகாரி மற்றும் வட்டாட்சியர், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிடி அலுவலகங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டி விளம்பரம் செய்தல்.

ஆ) படிவம் B அறிவிப்பினை மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் மக்கள் நன்கு எளிதில் பார்த்து தெரிந்துகொள்ளதக்க இடத்தில் ஒட்டி பிரசுரம் செய்ததற்கான சான்றினை சம்பந்தப்பட்ட

Scanned by CamScanner

அலுவலர்களிடம் பெற்று அதனை கோப்பில் இணைத்து வைக்க வேண்டும்.

இ) படிவம்–B–ல் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்பு, விண்ணப்ப தாரர்களிடமிருந்து அறிவிப்பு பிரசுரம் செய்த 30 நாட்களுக்குள் விதி 7–ன்படி வரையறுக்கப்பட்ட படிவம் C–ல் ஒப்படை கோரும் விண்ணப்பங்கள், சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் (ஒப்படை வழங்கும் அதிகாரி) அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். படிவம் –C–ல் அலுவலக முத்திரை தேதியுடன் பதித்தும், வரிசை எண் அளிக்கவும் வேண்டும். ஒப்படை வழங்கும் அதிகாரி அவரது சுருக்கொப்பம் மற்றும் தேதியை இடவேண்டும்.

3) விசாரணை:

படிவம் –B வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் (கிராமத்தில் வெளியிடப்பட்ட சரியான தேதியை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்) பெறப்பட்ட படிவம் – C விண்ணப்பங்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை ஒப்படை வழங்கும் அதிகாரி தயார் செய்து, அதன்மீது விசாரணை மேற்கொள்ள தேதி நிர்ணயித்து படிவம் –D–ல் கண்டவாறு அறிவிப்பு வெளியிட வேண்டும். விதி 8(3)ன் கீழ் புல தணிக்கை மற்றும் விசாரணையை ஒப்படை வழங்கும் அதிகாரி மேற்கொள்ள வேண்டும் அல்லது வருவாய் ஆய்வாளர் பதவிக்கு குறையாத அலுவலரை கொண்டு விசாரணை நடத்திட

வேண்டும். விண்ணப்பதாரர்கள் முன்பே மனுக்கள் அளித்திருந்தாலோ அல்லது படிவம் C–ல் விண்ணப்பிக்கா விட்டாலோ, படிவம் C–இல் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கலாம்.

4) ஒப்படை பெறுவதற்கான தகுதிகள்:

விதி 5–ன்படி கீழ்கண்ட நபர்கள் மிகைநிலத்தை ஒப்படை பெற தகுதி உடையவர்கள் ஆவர்.

i. தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் திருத்தச் சட்டம் அமலுக்கு வந்த நாளான 15.2.1970 அன்று நிலத்தை விவசாயம் செய்து கொண்டு அந்நிலத்தை உபரி நிலமாக அறிவித்த காரணத்தால் அந்நிலத்தை முழுவதுமாக இழந்துவிட்ட நபர்.

ii. பகுதி பயிரிடு குத்தகைதாரராகவோ அல்லது பகுதி உடைமையாளராகவோ அல்லது முழுவதும் பயிரிடு குத்தகைதாரராகவோ இருந்து, உபரி நிலமென அறிவிக்கப்பட்டதால், தன் கையிருப்பில் உள்ள நிலங்கள் 3 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கும் அல்லது ஒன்றரை ஏக்கர் நஞ்சை நிலத்திற்கும் குறைவாக உள்ள நபர்.

iii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த நிலமற்ற ஏழை விவசாயத்தொழிலாளர்.

iv. இராணுவ வீரர்கள்

v. பர்மா மற்றும் இலங்கையிலிருந்து குடியேறியவர்கள்

Scanned by CamScanner

vi. ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லாத நிலமற்ற ஏனைய விவசாய தொழிலாளர்கள்

vii. 3 ஏக்கர் புஞ்சை அல்லது 1 1/2 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு குறைவாக நிலம் வைத்துள்ள பயிரிடு குத்தகைதாரர்.

viii. ஒரு கூட்டுறவு பண்ணை சொசைட்டி உறுப்பினர்களில் ஏழை விவசாய தொழிலாளர்.

5) ஒப்படை ஆணை பிறப்பித்தல்:

விதி 8(4)ன் கீழான விசாரணையின் அடிப்படையில் ஒப்படை வழங்கும் அதிகாரி ஒப்படை ஆணை பிறப்பிக்கவேண்டும். விதி 8(4)இன்படி, விண்ணப்பதாரர் ஆணாக இருந்தாலும், ஒப்படை உத்தரவை குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் வழங்க வேண்டும். ஒப்படை ஆணையில், விண்ணப்பதாரர் விதி 5–ன் கீழ் குறிப்பிட்டுள்ள ஒப்படை பெறுவதற்கான தகுதியினை குறிப்பிட வேண்டும். விண்ணப்பம் நிராகரிக்கப்படும் இனங்களில், விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான குறிப்பிட்ட காரணத்தை ஒப்படை ஆணையில் குறிப்பிட வேண்டும். ஒப்படை உத்தரவை நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உட்பட அனைத்து விண்ணப்பதார்களுக்கும் சார்வு செய்ய வேண்டும். அறிவிப்புகள் மற்றும் ஒப்படை ஆணைகள் முறையே சட்டப்படியான அறிவிப்புகள் மற்றும் உத்தரவுகள் (Statutory notice and order) என்பதால், அவற்றை ஒப்படை வழங்கும்

அதிகாரி மட்டுமே கையொப்பமிட வேண்டும். ஒப்படை ஆணையின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும்.

6) ஒப்படை செய்ய அதிகபட்ச பரப்பு:

அதிகபட்ச பரப்பாக 3 ஏக்கர் வரை புஞ்சை நிலம், அல்லது 1 1/2 ஏக்கர் வரை நஞ்சை நிலம் ஒப்படை வழங்கலாம்.

7) ஒப்படைதாரர் நிலமதிப்பு செலுத்துதல்:

i. விதி 6ன்படி, ஒப்படைதாரர் அவருக்கு ஒப்படை அளிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலமதிப்பினை செலுத்த வேண்டும். நிலமதிப்பானது, மேற்படி சட்டத்தின் பட்டியல் III–ன் (Schedule III) பகுதி–1ல் பத்தி–3ல் குறிப்பிட்டவாறு, நிலத்தின் நிகர ஆண்டு வருமானத்தில் 12 மடங்கு அல்லது நிலத்தின் ஆண்டு மதிப்பில் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த விவரம் விதி 6ல் கூறப்பட்டுள்ளது.

ii. ஒப்படை உத்தரவை பிறப்பித்த பிறகு, ஒப்படைதாரர் ஒப்படை செய்யப்பட்ட நிலத்திற்கு செலுத்த வேண்டிய நிலமதிப்பு தொகையை தெளிவாக குறிப்பிட்டு ஒப்படை வழங்கும் அதிகாரி படிவம் E–ல் ஒப்படைதாரருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும்.

Scanned by CamScanner

iii. நிலமதிப்பு தொகையினை ஒரே தவணையாகவோ அல்லது 20 சம தவணைகளுக்கு மிகாமல் வட்டியுடன் அதற்கு நிர்ணயித்த தேதியில் தவணை தொகையினை செலுத்த வேண்டும். தவணை தொகை செலுத்த வேண்டிய நாள் வருடந்தோறும் மார்ச் மாதம் 10ஆம் தேதி ஆகும்.

iv. நிலமதிப்பு தவணைத் தொகையை வட்டாட்சியர் உரிய தேதியில் வசூல் செய்ய வேண்டும். நிலமதிப்பு தொகை வசூல் செய்த விபரங்களை ஒப்படை வழங்கும் அதிகாரி மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பேரேடுகளில் பதிவு செய்ய வேண்டும்.

8) 'எப்' படிவம்

நிலமதிப்பு தொகையை ஒரே தவணையில் முழுவதையும் அல்லது முதல் தவணையை ஒப்படைதாரர் செலுத்தியவுடன், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் முன்னிலையில் படிவம் –F–ல் நிறைவேற்றம் செய்து ஒப்படைதாரரின் கையொப்பம் பெற்று வழங்க ஒப்படை வழங்கும் அதிகாரி நடவடிக்கை மேற்கொள்வார். ஒப்படை நிறைவேற்றிய படிவம் F–ன் நகல் ஒன்றினை சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

9) உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்தல்:

நிலமதிப்பு தொகையினை, முதல் தவணையை அல்லது மொத்தமாக ஒப்படைதாரர் செலுத்தியவுடன், ஒப்படை ஆணையில் கண்டவாறு புல எண்கள் மற்றும் பரப்பு வாரியாக உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்ய ஒப்படை வழங்கும் அதிகாரி வட்டாட்சியருக்கு உத்தரவிடுவார்.

10) கிராம கணக்கில் மாறுதல் செய்தல்:

i. ஒப்படை ஆணையில் கண்டவாறு ஒப்படை செய்த பரப்பின் புல எண் மற்றும் பரப்பு வாரியாக தயார் செய்யப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள் வட்டாட்சியரால் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அவை குறித்த மாறுதல் பதிவுகளை கணினி சிட்டா உட்பட கிராம மற்றும் வட்டகணக்குகளில் வட்டாட்சியரால் பதிவு செய்து ஒப்படைதாரர்களுக்கு நிலத்தினை ஒப்பளிப்பு செய்ய வேண்டும். இவை தொடர்பாக வட்டாட்சியர் கிராம கணக்கு நகல்களுடன் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

ii. கிராம மற்றும் வட்ட கணக்குகள் மற்றும் 'தமிழ் நிலம்' ஆகியவற்றில் ஒப்படையின் நிபந்தனை குறித்த விபரங்கள் பதிவுசெய்ய வேண்டும்.

Scanned by CamScanner

11) ஒப்படை நிபந்தனைகள்:

விதி 9ல் கண்டவாறு, நில ஒப்படை கீழ்கண்ட நிபந்தனை களுக்குட்பட்டு வழங்கப்படுகின்றது.

i. ஒப்படை நிலத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் விற்கவோ அல்லது வேறு பரிவர்த்தனை செய்யவோ கூடாது.

ii. நிலமதிப்பு செலுத்துவது அடிப்படையில் நில ஒப்படை அளித்திருப்பின்;

a) முதல் தவணைத் தொகை கு படிவம் நிறைவேற்றும்முன் செலுத்த வேண்டும்.

b) இரண்டு தவணை தொகையை தொடர்ந்து செலுத்த தவறினால், செலுத்திய நிலமதிப்பு தொகையை இழக்க வேண்டி வரும் மேலும், ஒப்படை செய்யப்பட்ட நிலம் அரசு எடுத்துக் கொள்ளலாம்.

iii. ஒப்படை அளிக்கப்பட்ட நிலம், நிலமதிப்பு தொகையை முழுவதுமாக அரசுக்கு செலுத்திய பின்னர் அல்லது ஒப்படை வழங்கிய தேதியில் இருந்து 20 வருடங்கள் இவற்றில் ஏது பின்னர் முடிவடைகிறதோ அதற்கு பின்னரே ஒப்படை பெற்ற நிலம் ஒப்படைதாரருக்கு சொந்தமாகிறது.

iv. ஒப்படை அளிக்கப்பட்ட நிலங்கள், குறிப்பிட்ட காலம் முடிவடைவதற்கு முன்பு பொது பயன்பாட்டிற்கு தேவைப்பட்டால் எப்போது வேண்டுமானாலும், ஒப்படையில், மாறுதல் அல்லது ரத்து செய்து அரசு எடுத்துக் கொள்ளலாம்.

v. ஒப்படைதாரர் நேரடியாக விவசாயம் செய்தல் வேண்டும்.

vi. ஒப்படை நிபந்தனைகள் விதிகள் கு–படிவத்திலும் உள்ளது.

12) நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக ஒப்படையை ரத்து செய்தல் :

விதி 9(2)ன்படி, ஒப்படை விதிகளில் குறிப்பிட்ட அல்லது ‘F’ படிவத்தில் உள்ள ஒப்படை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டது என தெரியவரும்போது, ஒப்படை வழங்கும் அதிகாரி, ஒப்படைதாரருக்கு தக்க வாய்ப்புகள் அளித்து, ஒப்படையை ரத்து செய்து அந்த ஆணையின் அடிப்படையில் அதற்குரிய மாற்றங்களை உடனடியாக கிராம மற்றும் வட்ட கணக்குகளில் செய்ய வேண்டும். அதாவது அந்நிலங்களை மீண்டும் உபரிநிலமாக கணக்கில் கொண்டு வரவேண்டும்.

13) மிகை நிலத்தை மறு ஒப்படை செய்தல்:

ஒப்படையை ரத்து செய்யும் நேர்வுகளில், படிவம் B–ல் ஒப்படை விண்ணப்பங்களை கோருவதிலிருந்து, மேற்கண்ட ஒப்படை வழிமுறைகளை பின்பற்றி மறு ஒப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

14) மிகை நிலத்தை பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்தல்:

i. விதி 13ன்படி, பொதுபயன்பாட்டிற்காக உபரி நிலமாவது தேவைப்படும் என அரசு கருதினால் அந்நிலத்தை அப்பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யலாம் அல்லது அந்த

Scanned by CamScanner

நிலத்தை அத்தகைய பயன்பாட்டிற்காக அரசு கைப்பற்றி வைத்துக் கொள்ளலாம். இதற்காக, கேட்புத் துறைகள் (Requisitioning Body) அரசு வருவாய் துறைக்கு விண்ணப்பம் அளித்து அதன் நகலை முதன்மை செயலர்/ நிலச்சீர்திருத்த ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும்.

ii. இதற்காக ஒரு பதிவேட்டினை (விதி 13–க்கான பதிவேடு) பராமரிக்க வேண்டும்.

15) மேல்முறையீடு :

ஒப்படை வழங்கும் அதிகாரியின் ஒப்படை ஆணை மற்றும் ஒப்படை ரத்து ஆணை ஆகியவற்றின் மீது பாதிக்கப்பட்ட நபர், மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி மேல்முறையீட்டு அலுவலரும் நிலத் தீர்ப்பாயமுமான மாவட்ட வருவாய் அலுவலரிடம் அந்தந்த ஆணைகளின் தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் முறையே விதி 10(1) மற்றும் 10 –A (1)–ன்படி மேல்முறையீட்டு மனு சமர்ப்பித்து நிவாரணம் பெற்று கொள்ளலாம். விதி 11 (3)(a)–ன்கீழ் நில ஆணையரிடம் 60 நாட்களுக்குள் சீராய்வு மனு தாக்கல் செய்து நிவாரணம் தேடிக்கொள்ளலாம். மேல்முறையீட்டு அதிகாரி மற்றும் சீராய்வு அதிகாரி ஆகியோர் தொடர்புடைய MR IV கோப்புகளை பெற்றும், விசாரணை செய்தும் தக்க உத்தரவிடுவார்கள்.

விளக்கப்படம் – I

உபரிநிலங்களை ஒப்படை செய்வதற்கு முன்பு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்



Scanned by CamScanner

விளக்கப்படம் – II

உபரிநிலங்களை ஒப்படை செய்த பிறகு கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள்





Scanned by CamScanner

குத்தகைச் சட்டங்கள்:

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரருக்கும் இடையே எழக்கூடிய வழக்குகளுக்கு பல்வேறு குத்தகைச் சட்டங்களின்கீழ் தீர்வு காணும் பொருட்டு தனித்துணை ஆட்சியர் தலைமையில் நீதிமுறைச் சார்புடைய (quasi-judicial) அதிகாரங்களுடன் பத்து வருவாய் நீதிமன்றங்கள், மாநிலத்தில் 1. கடலூர், 2. மயிலாடுதுறை, 3. திருவாரூர், 4. தஞ்சாவூர், 5. மன்னார்குடி, 6. திருச்சிராப்பள்ளி, 7. இலால்குடி, 8. நாகப்பட்டினம், 9. மதுரை மற்றும் 10. திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 வருவாய் நீதிமன்றங்கள், வழக்குகளை விரைவாக முடிக்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2013–ல் நிறுவப்பட்டன. இந்த 10 வருவாய் நீதிமன்றங்களும் 5 வகையான குத்தகை சட்டங்கள் மற்றும் விதிகளை செயல்படுத்துகின்றன.

(i) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

நிலஉடைமையாளருக்கு குத்தகை தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டபயிர் அல்லாத பிற காரணத்திற்கான நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு

காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது. இது தொடர்பாக நில உடைமைதாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இடையே ஏற்படும் வழக்குகளை வருவாய் நீதிமன்றங்கள் முடிவு செய்கின்றன.

(ii) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம், மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகைத் தொகையை பணமாகவோ அல்லது விளை பொருள்களாகவோ செலுத்தலாம். பயிரிடும் செலவுகள் அனைத்தையும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த நிலத்திற்கான அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் நில உரிமையாளர்கள் பொறுப்பு ஆவார்கள்.

(iii) தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண் நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)

இச்சட்டம், பொது அறக்கட்டளைகள் வேளாண் நிலங்களை சொந்தமாக சாகுபடி செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் முதலியவைகளுக்கு வகை செய்கிறது. மேலும், பொது

Scanned by CamScanner

அறக்கட்டளைக்கும் அவற்றின் பயிரிடு குத்தகைதாரர்களுக்கும் இடையேயான உறவை ஒழுங்குபடுத்தவும் வகை செய்கிறது. பொது அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம். மீதமுள்ள நிலத்தை பிறருக்கு குத்தகைக்கு விடவேண்டும். இதில் ஏற்படும் வழக்குகளை வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

(iv) தமிழ்நாடு வேளாண் நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தின் கீழ், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களை குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ் வட்டாட்சியர் குத்தகை உரிமையை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார். இச்சட்டத்தின் கீழ் இதுவரை 2,59,915 நபர்கள் குத்தகைதாரர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

(v) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்திய சட்டம் 39/90

இச்சட்டத்தின்படி, குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து 1.4.1990 தேதியில் குடியிருந்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. சொந்த வீட்டுமனை இல்லாத

கிராமபுற கைவினைஞர்களும் இந்த குடியிருப்பு உரிமை பெற இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தனித் துணை ஆட்சியர்களின் (வருவாய் நிதிமன்றம்) அதிகார எல்லைகள் கீழ்க்கண்டவாறு :–

வ. எண்	தனித் துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்)	அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்
1.	கடலூர்	கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள்.
2.	திருச்சிராப்பள்ளி	பெரம்பலூர், அரியலூர், சேலம், கரூர், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி, மணப்பாறை மற்றும் திருவெரும்பூர் வட்டங்கள்.
3.	லால்குடி	திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில், லால்குடி, முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர், தொட்டியம் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்கள்.

Scanned by CamScanner

4.	மதுரை	மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள்.
5.	திருநெல்வேலி	திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள்.
6.	திருவாரூர்	திருவாரூர் வருவாய் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நன்னிலம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள்.
7.	மன்னார்குடி	திருவாரூர் வருவாய் மாவட்டத்தில், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டங்கள்.
8.	மயிலாடுதுறை	நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் குத்தாலம் வட்டங்கள்.
9.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில், நாகப்பட்டினம் கீழ்வேளூர், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள்
10.	தஞ்சாவூர்	தஞ்சாவூர் வருவாய் மாவட்டம்.

குறைந்தபட்ச ஊதிய சட்டங்கள்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம் 1969 மற்றும் குறைந்த பட்ச ஊதிய சட்டம்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம் 1969, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான விவசாயப் பணிகளுக்கான நியாய ஊதியம் வழங்க வகை செய்கிறது. ஏனைய மாவட்டங்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் செயல்படுத்தப்படுகிறது. இச்சட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்படுகின்றன.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011

அரசாணை (நிலை) எண்.265, வருவாய் (நி.சீ.1(2) துறை, நாள் 10.9.2011–இன்படி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் (CMUPT) 10.9.2011 முதல் செயல்படுத்தப்படுகிறது.

தகுதிகள்

விவசாய உறுப்பினர்கள்

2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு / சிறு விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த

Scanned by CamScanner

தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாக பதிவு பெற தகுதியானவர்கள் ஆவர். விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில் என்பது, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, கால்நடை வளர்த்தல், பால் பண்ணைத் தொழில், உரவகையிலான பயிர்களை வளர்த்தல், மேய்ச்சலுக்காக பயன்படுத்துதல், செடிகள் வளர்த்தல், கோழிப் பண்ணை, மரங்களை வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடி தொழில் முதலியன ஆகும்.

சார்ந்த உறுப்பினர்கள்

விவசாய உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் (பொருள் ஈட்டாத) குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் சார்ந்த உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள் ஆவர்.

i) மனைவி அல்லது கணவன் (நேர்வுக்கேற்ப)

ii) குழந்தைகள்

iii) இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்

iv) பெற்றோர்

நிதிஉதவி

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நிதி உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர்களுக்காக,

(1) திருமண உதவித்தொகை

(2) முதியோர் ஒய்வூதியம்

(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

(4) விபத்து நிவாரணம்

(5) இயற்கை மரண உதவித்தொகை

(6) ஈமச் சடங்கு செலவு

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக,

(1) கல்வி உதவித்தொகை

(2) திருமண உதவித்தொகை

(3) எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித்தொகை

(4) ஈமச்சடங்கு செலவு

Scanned by CamScanner

விவசாய உறுப்பினரின் இறப்புக்கும் பின்னரும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் அவர்களுக்கான உதவித் தொகையினை தொடர்ந்து பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழான உதவிகளின் சிறப்பு அம்சங்கள்:–

அ) உறுப்பினர்களுக்காக

1. திருமண உதவி

விவசாய உறுப்பினரின் சட்டப்படியான திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/– மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி வழங்கப்படுகிறது.

2. முதியோர் ஓய்வூதியம்

முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.1000/– வருவாய் நிருவாகத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

3. உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவிதொகை

உறுப்பினர்கள் சில நோய்களால் / கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் உறுப்பினர்கள் விவசாய தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடல் திறனற்ற காலத்தில் வருமானம்

இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே, மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், எச்.ஐ.வி / எய்ட்ஸ், சிறுநீரக நோய், இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis) புற்றுநோய், கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, முதுகு தண்டுவடம் பாதிப்பு, நரம்பு சம்பந்தமான நோய், இதயம் சம்பந்தமான பிரச்சனைகள், பார்வை இழத்தல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, மனநிலைபாதிப்பு, அரிவாள் செல் ரத்த சோகை (Sickle Cell Anemia), ரத்த அளிவு சோகை (Thalassemia), ரத்த உறையா நோய் (Haemophilia) போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/– வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் 2012 –13ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு வருகிறது.

4. விபத்து நிவாரணம்

உறுப்பினர் விபத்தில் உயிரிழந்தால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதிஉதவி மூலம் துயர்துடைக்கும் வகையில், ரூ.1,00,000/– வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஒருசிறந்த உதவியாக உள்ளது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

Scanned by CamScanner

விபத்து காயங்களுக்கு உதவி

வ. எண்	காயங்களின் விபரம்	தொகை (ரூபாயில்)
i	இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல்	1,00,000
ii	ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல்	
iii	இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல்	
iv	ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல்	50,000
v	பக்கவாதம்	50,000
vi	மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்	20,000

5. இயற்கை மரணத்திற்கான உதவி

விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.20,000/– வழங்கப்படுகிறது.

6. ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/– வழங்கப்படுகிறது.

ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கு உதவிகள் கீழ்க்கண்டவாறு:–

1. கல்வி உதவி

உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

வ. எண்	கல்வி விவரம்	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்குவோர்	
		ஆண் (ரூ)	பெண் (ரூ)	ஆண் (ரூ)	பெண் (ரூ)
1.	தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல் தொழில் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950
2.	கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950

Scanned by CamScanner

3.	இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1750	2250	2000	2500
4.	முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு . (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	3250	3750
5.	சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	4250	4750

6.	முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	4250	4750	6250	6750

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகையும் நிறுத்தப்படும். கல்வி உதவித் தொகையினை பொறுத்தவரை, பயனாளிகள் வேறு எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெற்றிருந்தாலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையை கூடுதலாக பெறலாம்.

2. திருமண உதவி

விவசாய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்குவது போல், விவசாய உறுப்பினர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8000/—மும் பெண்களுக்கு ரூ.10,000/—மும் வழங்கப்படுகிறது.

3. எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கு மானியம்

விவசாய உறுப்பினர் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த பிறகு, ஒரு சிலவற்றில் அவர்களின் குழந்தைகளும் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது அனாதைகளாகி விடுகின்றனர். இந்த மாதிரியான குழந்தைகளுக்கு தங்களின் படிப்பினை தொடர இயலாமலும் அல்லது அவர்களின் அடிப்படை தேவைகளை சமாளிக்க

Scanned by CamScanner

முடியாமலும் ஆகிறது. எனவே, இவர்களுக்கு மாதம்தோறும் மானியமாக ரூ.1000/– 2013 – 14 முதல் வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி / எயிட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு டிரஸ்டுக்காக, தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (Tamil Nadu AIDS Control Society) தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழு (District Committee) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த உதவி எச்.ஐ.வி / எயிட்ஸ்–ஆல் பெற்றோரை (ஒருவர் / இருவரையும்) இழந்த 0–18 வயது வரை உள்ள அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

4. ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர்களுக்கு வழங்குவதுபோல், சார்ந்த உறுப்பினர்கள் இறந்தாலும், ஈமச்சடங்கு செலவு தொகையாக ரூ.2,500/– இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

பூமிதான வாரியம்:

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபா பாவே அவர்களால் 1951ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. நிலச்சுவான்தாரர்கள் மனமுவந்து அளித்த நிலதானமே இந்த இயக்கத்தின் சிறப்பாகும். ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் 13.03.56 முதல் 18.04.57 வரை பல்வேறு மாவட்டங்களில் பாத யாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதானத்திற்கு நிலங்களை தானமாக பெற்றார்.

அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத

ஏழைகளுக்கு ஒப்படைக்க “தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958” இயற்றப்பட்டு அமுலாக்கப்பட்டது. பூமிதானச் சட்டத்தின் விதிமுறைகள் 1959ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

பூமிதான நிலங்கள் தமிழ் நாடு பூமிதான வாரியத்தால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு பூமிதான வாரியத்தில், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், நிலச்சீர்திருத்த இயக்குநர் அவர்கள் உறுப்பினர் செயலாளராகவும், வருவாய்த் துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் வேளாண்மைத்துறை இயக்குநர் ஆகியோர் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும், முதன்மைச் செயலர் / நிலச் சீர்திருத்த ஆணையர் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகவும் மற்றும் 10 அலுவல்சாரா உறுப்பினர்களும் இருப்பர். தமிழ்நாடு பூமிதான சட்டப்பிரிவு 5 ன்படி வாரியத்தின் பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும்.

நிலங்கள் தானம் பெறுதல்

நிலங்கள் பூமிதானமாக பெற்றவுடன் அதனை பூமிதான வாரியத்தின் வசம் கொண்டு வருவதற்கு கீழ்க்கண்ட முறைகள் பின்பற்றப்படுகின்றது.

1. தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958 பிரிவு 16–இன் படி, இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் தானம் பெறப்பட்ட நிலவிபரங்கள் படிவம் VII இல் பூர்த்தி செய்து, கிராமச்சாவடி, வட்ட அலுவலகம், பள்ளி போன்ற பொது இடங்களில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். மேற்படி சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட

Scanned by CamScanner

பின்னர் படிவம் IV இல் மேற்கண்ட பொது இடங்களில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

2. அவ்வாறு விளம்பரம் செய்யப்பட்ட படிவம் ஏஜஐ அல்லது படிவம் IV–இன் அறிவிக்கை மாவட்ட அரசிதழில் தமிழிலும், மாநில அரசிதழில் ஆங்கிலத்திலும் பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

பூமிதான நிலத்தை உறுதியாக்கம் செய்தல்

1. படிவம் VII அல்லது படிவம் IV–இன் அறிவிக்கை மாவட்ட அரசிதழில் தமிழிலும், மாநில அரசிதழில் ஆங்கிலத்திலும் பிரசுரம் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்குள் ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லையாயின், தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958 பிரிவு 17(4) இன்படி, சம்பந்தப்பட்ட வட்டாட்சியரால் ஊர்ஜித ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

2. சட்டப்பிரிவு 17(1)–இன்படி மேற்படி அறிவிக்கை பிரசுரம் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்குள் ஆட்சேபனை ஏதும் பெறப்படின், விசாரணை அதிகாரி (வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர்) பெறப்பட்ட தானம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு தானத்தை உறுதி செய்தோ அல்லது தள்ளுபடி செய்தோ உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

3. அவ்வாறு விசாரணை அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, அவ்வாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து

3 மாதங்களுக்குள் மாவட்ட அரசிதழில் தமிழிலும், மாநில அரசிதழில் ஆங்கிலத்திலும் பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்தல்

1. வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உறுதியாக்க ஆணையை, சட்டப்பிரிவு 17(5) (b)(ii) – இன்படி சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பூமிதான நிலமாக பதிவு செய்ய அனுப்ப வேண்டும்.

2. பூமிதான நிலங்களை பதிவு செய்வதற்கு பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திலிருந்தும், நேரில் ஆஜராவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பட்டா மாற்றம்

1. உறுதியாக்கம் மற்றும் பதிவு செய்த பின் சட்டப் பிரிவு 17(6) –இன்படி, பூமிதான நிலத்தை சரியான நான்குமால்படி உட்பிரிவு செய்து தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டும்.

2. பூமிதான நிலங்களின் பட்டா, பூமிதான வாரியத்தின் பெயரில் மட்டுமே இருக்க வேண்டும்.

விநியோகம் (சட்டப்பிரிவு 19(1) மற்றும் விதி (1) இன்படி.)

1. பூமிதான நிலங்கள், நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய காரியத்திற்காகவும், வீட்டுமனைகளாகவும் விநியோகம் செய்யப்படுகிறது.

Scanned by CamScanner

2. நிலமற்ற ஏழை என்பவர் நிலமில்லாதவராகவோ, ஒரு ஏக்கர் நஞ்சை அல்லது 2 ஏக்கர் புஞ்சை நிலமுடையவராகவோ, ஆண்டு வருமானம் ரூ. 25,000/ –க்குள் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

3. இதைத் தவிர பொதுக் காரியத்திற்காக அரசுக்கோ, அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கோ வழங்கலாம்.

4. நில விநியோகப் பத்திரம் வாரியத் தலைவரால் மட்டுமே கையொப்பமிடப்படும்.

5. நில விநியோகம் பெற்றவருக்கு பூமிதான நிலத்தின் அனுபவ பாத்தியதை மட்டுமே உண்டு. பூமிதான நிலத்தின் பட்டா எப்பொழுதும் பூமிதான வாரியத்தின் பெயரில்தான் இருக்கும்.

6. பூமிதான நிலத்தை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ விநியோகதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

7. விநியோக நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில், விநியோகத்தை ரத்து செய்து வேறு ஒரு நபருக்கு விநியோகம் செய்வதற்கு பூமிதான வாரியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

மாற்று நிலம்

தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958 பிரிவு 17(A) –இன்படி தானம் அளிக்கப்பட்ட நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலம் பெற்றுக் கொள்வதற்கு சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தானதாரர் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மட்டுமே மாற்று நிலம் கொடுக்க

இயலும். மாற்று நிலம் பூமிதான நிலத்திற்கு சமமான மதிப்புடையதாக இருக்க வேண்டும்.

பொது நோக்கத்திற்காக தனி நபர் அல்லது நிறுவனத்திற்கு பூமிதான நிலம் வழங்குதல் சட்டப் பிரிவு 19(3) –இன்படி, பொது நோக்கத்திற்காக பூமிதான நிலம் தனி நபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அத்தியாவசியமாகத் தேவைப்படும் இனங்களில் மட்டும், அதன் அவசியத்தை ஆய்வு செய்து பூமிதான வாரிய அங்கீகாரம் பெற்று, அரசு ஒப்புதலுடன், சந்தை மதிப்பின் இரண்டு மடங்கை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு பூமிதான நிலத்தை வழங்குவதற்கு சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் அலுவலகம் 1993 ஆண்டு மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநரை தனி அலுவலராகக் கொண்டு செயல்பட்டு வந்தது. அரசாணை எண்.144 ஊரக வளர்ச்சித்துறை, நாள்.14.10.2006 –இன் படி, ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நிலச் சீர்திருத்தத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. இதைத் தவிர பொதுக் காரியத்திற்காக அரசுக்கோ, அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கோ வழங்கலாம்.

Scanned by CamScanner